தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 265/2019 | சாட்சியம் | : | **WW1** |
| **Name** | : | திரு.சிவபிரகாஷ் | | | |
| **Date** | : | **09.06.2026** | | | |
| **Time** | : | **4.00 p.m to 4.18 p.m** | | | |

தொ.த.சா.**1.**திரு.சிவபிரகாஷ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் எப்போது பணி நிரந்தரம் செய்யப்பட்டேன் என்றால் 01.04.2015 அன்று பணி நிரந்தரம் செய்யப்பட்டேன். தொழிற்சங்கம் 03.06.2015 அன்று தொடங்கப்பட்டது என்றால் ஆமாம். நான் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் என்ற காட்ட ஆதாரம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் உறுப்பினர் பட்டியல் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எதிராக குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு அது பொருத்து உள்துறை விசாரணை நடத்தி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக அறிக்கை வழங்கப்பட்டதா என்றால் ஆமாம். ஆனால் அதில் உண்மை இல்லை. நான் நிர்வாகத்திற்கு எதிராக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் தெரியாது. அந்த புகாரின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

என்றால் தெரியாது. நிர்வாகத்திற்கு எதிராக தொழிற்சங்க நிர்வாகிகள் தான் புகார் கொடுத்தார்கள் நான் தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை. நான் சார்ந்த தொழிற்சங்கம் இப்போது வரை நிர்வாகத்தில் இயங்கி வருகிறது என்றால் ஆமாம். தொழிற்சங்கம் நிர்வாகத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது என்றால் கேள்விப்பட்டு இருக்கிறேன். நான் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன் பொறுப்பு எதுவும் வகிக்கவில்லை. உள்துறை விசாரணையின் போது வனிதா என்பவர் சாட்சியம் அளித்து அவரின் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த போது என் சார்பாக வனிதாவின் கணவரிடம் பேசி சுமுக தீர்வுக்காக முயற்சித்த காரணத்தினால் வனிதா என்பவர் உள்துறை விசாரணையின் போது ஒரு கடிதம் கொடுத்தார் என்றாலும் அது நி.சா.ஆ.**10** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் விசாரணையின் போது அந்த ஆவணம் வனிதாவால் கொடுக்கப்பட்டது ஆனால் என் சார்பாக வனிதாவிடம் யாரும் சுமுக தீர்விற்காக பேச்சு வார்த்தை எதுவும் நடத்தவில்லை. அந்த கடிதத்தின் நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம் அது நி.சா.ஆ. **27.** உள்துறை விசாரணையின் போது வனிதாவை குறுக்கு விசாரணை செய்ய போதிய அவகாசம் வழங்கப்பட்டது என்றாலும் என் சார்பாக வனிதாவின் கணவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி வந்ததன் அடிப்படையில்

அவர் ஆஜராகாமல் இருந்து விட்டார் என்றால் தவறு. 12.03.2025 அன்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த சாட்சியத்தில் எல்லம்மாள் குறித்து நான் சொல்லி உள்ள சங்கதிகள் உண்மையானவை தான் என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூலம் பத்தி 5 முதல் 9 வரையில் கண்டுள்ள சங்கதிகள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. நான் இப்போது எங்கு வேலை பார்த்து வருகிறேன் என்றால் வேலை எதுவும் இல்லை. என் மனைவி வேலை செய்து வருகிறார் நான் வீட்டில் இருந்து பிள்ளைகளை கவனித்து வருகிறறேன். இந்த விவரத்தை சாட்சியத்தில் சொல்லவில்லை. என்னுடைய பணி நீக்கமானது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையில் ஆனது என்றாலும் அதற்கும் என்னுடைய தொழிற்சங்க ஈடுபாட்டிற்கும் தொடர்பு இல்லை என்றாலும் சரி அல்ல. நான் சொல்வது போன்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதன் காரணமாக நிர்வாகம் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் நிர்வாகம் என்னை பணி நிரந்தரம் செய்திருக்காது. தொழிற்சங்கம் தொடங்கிய பின்னர் தான் நான் பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறேன் என்ற காரணத்தினால் நான் முன்வைக்கும் வாதுரை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. பணிநீக்கம் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையில் ஆனது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:09.06.2026.